**PR/2018/23/T**

# ஜப்பான் தூதரகம்

இல. 20, ஶ்ரீமத் ஆர்.ஜி. சேனானாயக்க மாவத்த, கொழும்பு 7, இலங்கை
தொலைபேசி: 94-11-269-3831~3, தொலைநகல் : 94-11-269-8629
மின்னஞ்சல்: cultujpn@sltnet.lk

ஓகஸ்ட் 17, 2018

<u>ஊடக அறிக்கை</u>

## ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் ஒனோடெர இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்

ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சர் இட்சுனோரி ஒனோடெர, 2018 ஓகஸ்ற் 20ம் திகதி முதல் 22ம் திகதி வரை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். ஜப்பானிய பாதுகாப்பு அமைச்சரொருவர் இலங்கைக்கான விஜயமொன்றை மேற்கொள்வது இதுவே முதன்முறையாகும்.

அமைச்சர் ஒனோடெர இலங்கையில் தங்கியிருக்கும் காலப்பகுதியில், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தனவுடன் ஜப்பான்-இலங்கை பாதுகாப்பு தொடர்பான ஆலோசனைகளை நடத்தவுள்ளதுடன் இலங்கை அரசாங்கத்தின் உயர் மட்டத் தலைவர்களையும் சந்திக்கவுள்ளார். அத்தோடு கொழும்பிற்கு வெளியிலும் பயணங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளார்.

ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான ‘‘விரிவான பங்களிப்பு’ மேலும் வலுப்பெறுவதற்கு இந்த விஜயம் உறுதுணையாக அமையும் என ஜப்பானிய தூதரகம் எதிர்பார்க்கின்றது.

( முற்றும் )

*************************************************************

மேலதிக விபரங்களுக்கு பொதுசன தொடர்புகள் பிரிவினருடன் தொடர்புகொள்ளவும்
தொலைபேசி: 011-269-3831~3